**THE LABOUR COURT, SALEM**
**I.A.No.1/2026 in**
**I.D.No. 141 of 2009**
**Deposition of PW1**

Name :திரு. K.சுரேஷ்குமார் Father's Name :கந்தசாமி

Village :தாதகாபட்டி Taluk :சேலம்

Age :55 Calling :

Deposition of witness for the Petitioner / Respondent solemnly affirmed by Tmt.M. Maheswari ( Bench Clerk Gr.I ) of this court on 18.08.2026 in accordance with Provisions X of Evidence Act 1872.

**முதல் விசாரணை**

நான் இம்மனுவில் மனுதாரர்/நிர்வாக தரப்பு சாட்சி. நான் ஏற்கனவே எனது முதல் விசாரணை பிரமாண வாக்குமூலத்தை தாக்கல் செய்துள்ளேன். தற்போது கீழ் கண்ட ஆவணங்களை தாக்கல் செய்கிறேன்.

| S. No. | Date | Description of Doc | Nature of Doc | Exhibit No. |
|---|---|---|---|---|
| 1 | 10.04.1997 | மனுதாரர் நிர்வாகத்தில் செயலாளர் பணியின் கடமைகளும், பொறுப்புகள் (எஸ்.எப்.டி.ஐ.எஸ்.நெ.1239/97 டி) குறித்த பதிவேட்டு | சான்றிட்ட நகல் | Ex.P1 |
| 2 | 04.12.2002 | எதிர்மனுதாரர் செய்து வந்த "செயலாளர்" பணியின் கடமைகளும் பொறுப்புகளும் குறித்த தீர்மானம் | சான்றிட்ட நகல் | Ex.P2 |

| | | | | |
|---|---|---|---|---|
| 3 | 21.11.2020 | எதிர்மனுதாரர் மாண்பமை சேலம் முதன்மை மாவட்ட நீதிமன்றத்தில் தாக்கல் செய்த C.M.A.(C.S.)No.7 of 2018 மேற்முறையீட்டு மனு தள்ளுபடியான தீர்ப்பு | சான்றிட்ட நகல் | Ex.P3 |
| 4 | 07.02.2024 | எதிர்மனுதாரர் மாண்பமை சென்னை உயர்நீதிமன்றத்தில் தாக்கல் செய்த C.R.P.(NPD) No.2528 of 2021 சீராய்வு மனு தள்ளுபடியான தீர்ப்பு | சான்றிட்ட நகல் | Ex.P4 |

எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை

நான் சம்பவக்காலத்தில் மனுதாரர் நிர்வாகத்தில் எழுத்தராக பணிபுரிந்து வந்தேன். எதிர்மனுதாரர் சுப்ரமணியன் 01.07.1997 ஆம் தேதி பணியில் சேர்ந்தார். எதிர்மனுதாரர் சுப்ரமணியன் மனுதாரர் சங்கத்தில் மேற்படி தேதியில்தான் பணியில் சேர்ந்தார் என்பதை காட்டுவதற்கு ஆவணங்கள் தாக்கல் செய்யவில்லை என்றால் சரி. பணியாளர் மீது முறையான ஒழுங்கு நடவடிக்கை எடுத்து பணி நீக்கம் செய்யப்பட்டார் என்றால் சரி. பணியாளர் மீது பிறப்பிக்கப்பட்ட நிரந்தர பணி நீக்கம் ஆணையை எதிர்த்து தாக்கல் செய்யப்பட்ட வழக்கு தான் I.D.No.141/2009 என்றால் சரி. மேற்படி I.D.No.141/2009 என்ற வழக்கு சென்னை உயர்நீதிமன்ற உத்தரவின் படி மீள விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டுள்ளது என்றால் சரி. முதல் நிலை விசாரணையில் (Preliminary enquiry) ஆவணங்களை நிர்வாகம் தாக்கல் செய்து நீதிமன்றத்தில் குறியீடு செய்யப்பட்டது என்றால்

சரி. முதல் நிலை விசாரணையில் நிர்வாகம் நடத்திய உள்விசாரணை இயற்கை நீயதிக்கு முரணானது இந்நீதிமன்றம் 23.03.2026 ஆம் தேதி முடிவு செய்துள்ளது என்றால் சரி. மேற்படி 23.03.2026 ஆம் தேதி இந்நீதிமன்றத்தில் பிறப்பிக்கப்பட்ட உத்தரவை எதிர்த்து மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்றத்தில் மேல்முறையீடு தாக்கல் செய்துள்ளீர்களா என்றால் இல்லை. 23.03.2026 ஆம் தேதி உத்தரவு பிறப்பிக்கப்பட்ட பிறகு சுமார் ஒரு மாதம் கழித்து இந்த இடைநிலை மனுவை தாக்கல் செய்துள்ளீர்கள் என்றால் சரி. I.D.No.141/2009 என்ற பிரதான வழக்கில் நிர்வாகம் எதிர் வழக்குரை தாக்கல் செய்துள்ளது. மேற்படி எதிர் வழக்குரையை நான் தான் கையெழுத்து செய்து நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரி. இந்த வழக்கில் செயலாளர் என்ற பதவி நிர்வாகம் அல்ல என்றால் சரி, ஆனால் எனக்கு இந்த வழக்கில் அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது. இந்த வழக்கில் நிர்வாகம் என்பது நிர்வாக குழு அல்லது செயலாட்சியர் என்றால் சரி. தற்போது சங்க நிர்வாகம் செயலாட்சியரின் கட்டுப்பாட்டில் உள்ளது என்றால் சரி. செயலாட்சியர் உங்களுக்கு வழங்கிய அதிகாரமளிப்பு பத்திரத்தை இம்மனுவில் தாக்கல் செய்துள்ளீர்களா என்றால் இல்லை ஆனால் பிரதான வழக்கான I.D.No.141/2009 யில் தாக்கல் செய்துள்ளேன். I.D.No.141/2009 வழக்கில் மேற்படி அதிகாரமளிப்பு பத்திரம் குறியீடு செய்யப்பட்டுள்ளதா என்றால்

இல்லை. ம.சா.ஆ.1 சங்கதுணை விதி ஆவணத்தில் 45 வது பக்கத்தில் பிரிவு 36 ல் செயலாளர் என்பவர் பணியாளர் இல்லை அவர் அலுவலர் என்ற வகைப்பாட்டில் வருவார் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. பிரிவு 36 ல் செயலாளர் என்பவர் பணியாளர் என்ற பதத்தில் வரமாட்டார் என்று வெளிப்படையாக குறிப்பிடப்படவில்லை என்றால் சரியல்ல. நிர்வாகத்தின் நடவடிக்கைகள் துணைவிதிகளுக்கு முரணான வகையில் அமைந்துள்ளது என்றால் சரியல்ல. சங்க துணை விதி பிரிவு 36 ல் மொத்தம் 8 உட்பிரிவுகள் உள்ளது. மேற்படி 8 உட்பிரிவுகளில் 4 வது உட்பிரிவை தவிர மற்ற உட்பிரிவுகளில் செயலாளர் அலுவலர் என கண்டுள்ளதா என்றால் இல்லை. நிர்வாக குழுவின் அனுமதியின் பேரில் சங்கத்தின் சார்பாக செயலாளர் வழக்கு தொடுக்கவோ அல்லது எதிர் வழக்காடவோ பிரிவு 36(4) செயலாளருக்கு அதிகாரமளித்துள்ளது என்றால் சரி. நான் தற்போது சங்கத்தின் செயலாளராக பணிபுரிந்து வருகிறேன். எனக்கு கீழ் பணிபுரியும் ஊழியர்களுக்கு சிறு விடுப்பு அளிக்கும் அதிகாரம் எனக்கு உள்ளது. அவ்வாறு சிறுவிடுப்பு அளிப்பதற்கு துணை விதிபடியோ அல்லது செயலாட்சியரோ எனக்கு அதிகாரம் வழங்கியுள்ளனரா என்றால் இல்லை. தனிப்பட்ட அதிகாரத்தை வைத்து சங்க செயலாளர் என்ற முறையில் எனக்கு கீழ் பணிபுரியும் ஊழியர்களுக்கு சிறுவிடுப்பு அளித்து வருகிறேன் என்றால் சரி. நான் வழங்கும் சிறு விடுப்பு குறித்து

செயலாட்சியருக்கோ அல்லது நிர்வாக குழுவிற்கோ தகவல் தெரிவித்து அனுமதி பெறவேண்டும் என்றால் சரி. ஈட்டிய விடுப்பு மற்றும் மருத்துவ விடுப்பு வழங்கும் அதிகாரம் செயலாட்சியருக்கோ அல்லது நிர்வாக குழுவிற்கு மட்டுமே உள்ளது என்றால் சரி. பணியாளர் சுப்ரமணியம் எதிர்மனுதாரர் சங்கத்தில் இதர பணியாளர்களுக்கு அன்றாடம் பணி ஒதுக்கீடு செய்யும் பணியை செய்தால் அவர் பணி வழங்குபவர் என்று எனது முதல் விசாரணை பிரமாண பத்திரத்தில் குறிப்பிட்டுள்ளேன். ம.சா.2 ஆவணம் பணியாளர்களின் கடமைகளும் பொறுப்புகளும் சம்பந்தப்பட்டது என்றால் சரி. சங்கத்தின் தற்போதைய செயலாளர் என்ற முறையில் நான் மற்ற பணியாளர்களுக்கு அன்றாட பணி ஒதுக்கீடு செய்யும் அலுவலை செய்து வருகிறேன் என்றால் சரி. எழுத்து மூலமாக அன்றாட பணி ஒதுக்கீடு செய்கிறீர்களா என்றால் இல்லை. நான் சங்கத்தின் அலுவல் காரணமாக வெளியில் சென்றிருக்கும்போதோ அல்லது நான் விடுமுறையில் இருக்கும்போதோ மற்ற பணியாளர் அவர் அவரகளுக்கு ஏற்கனவே ஒதுக்கப்பட்ட பணிகளை செய்வார்கள். அவ்வாறு ஏற்கனவே ஒதுக்கப்பட்ட பணிகளை பணியாளர்கள் செய்வதற்கு சங்க செயலாளர் என்ற முறையில் ஏதாவது தீர்மானம் நிறைவேற்றி கொடுத்துள்ளீர்களா என்றால் இல்லை, சங்க செயலாளருக்கு தீர்மானம் இயற்றும் அதிகாரம் இல்லை. சங்கத்தின் பணியாளர்களுக்கு உரிய கடமைகளும்

பொறுப்புகளும் குறித்து செயலாட்சியர் தீர்மானம் நிறைவேற்றி கொடுப்பார் அதை செயல்படுத்துவது செயலாளரின் கடமை. அன்றாட பணிகளை குறித்து அனுதினமும் சங்க செயலாட்சியர் தீர்மானம் நிறைவேற்றி கொடுக்கமாட்டார் என்றால் சரி. ம.சா. 2 சங்கத்தின் தீர்மான புத்தகம் என்றால் சரி.

குறிப்பு: பணியாளர் தரப்பு வழக்கறிஞர் கேட்டுக்கொண்டதற்கிணங்க குறுக்கு விசாரணை தொடர்ச்சி வேறு தேதிக்கு ஒத்திவைக்கப்படுகிறது.

MUNUSAMY Digitally signed by MUNUSAMY Date: 2026.08.18 17:48:23 +0530

Presiding Officer,
Labour Court, Salem.